2 ஆம் உலகத் தமிழ் எழுத்தாளர் மாநாடு – சென்னை

9,10,11 – ஜூன் 2017

(2nd World Tamil Writers Conference - Chennai.9,10,11-June2017)

'தமிழுக்கு அமுதென்று பேர்'

பூமிப் பந்தின் கீழ்ப்புறத் துள்ள
பற்பல தீவினும் பரவியிவ் வெளிய
தமிழச் சாதி, தடியடி யுண்டும்

காலுதை யுண்டும் கயிற்றடி யுண்டும்
வருந்திடுஞ் செய்தியும் மாய்ந்திடுஞ் செய்தியும்
பெண்டிரை மிலேச்சர் பிரித்திடல் பொறாது
செத்திடுஞ் செய்தியும் பசியாற் சாதலும்

பிணிகளாற் சாதலும் பெருந்தொலை யுள்ளதம்
நாட்டினைப் பிரிந்த நலிவினாற் சாதலும்
இஃதெலாங் கேட்டும் எனதுளம் அழிந்திலேன்;
'தெய்வம் மறவார்; செயுங்கடன் பிழையார்;
ஏதுதான் செயினும், ஏதுதான் வருந்தினும்,
இறுதியில் பெருமையும் இன்பமும் பெறுவார்'

-பாரதியார்

மாநாடு நிகழுமிடம் :

முத்தமிழ்ப் பேரவை டி.என். இராஜரத்தினம் கலையரங்கம்,
ராஜா அண்ணாமலைபுரம், (அடையாறு பாலம் அருகில்)
சென்னை-600028

பதிவு அலுவலகம் : திரு. மு. சிதம்பரபாரதி, செயலாளர், Plot B-1, 2வது தளம், 2வது பிரதான சாலை, பர்மா காலனி, பெருங்குடி, சென்னை-600 096
செயல் அலுவலகம் : திரு. ப. முத்துக்குமாரசுவாமி, தலைவர், 5B, விஸ்வாஸ் அடுக்ககம், 2/3 பிள்ளையார் கோவில் தெரு, நெசப்பாக்கம், சென்னை-600 078

சிறப்பு மதியுரைஞர்கள்

திரு. ஜி. விசுவநாதன்,
வேந்தர், வி.ஐ.டி. பல்கலைக்கழகம்

திரு. கே. வைத்தியநாதன்,
ஆசிரியர், தினமணி

டத்தோஸ்ரீ உத்தாமா. ச. சாமிவேலு,
சிறப்புத் தூதர், மலேசியா

திரு. நா. ஆண்டியப்பன்,
தலைவர், சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம்

கலைமாமணி, செவாலியே,
முனைவர் வி.ஜி. சந்தோஷம்
தலைவர், வி.ஜி.பி. குழுமம்

முனைவர் மூ. ராஜாராம் இ.ஆ.ப.,
முன்னாள் அரசுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, தமிழ்நாடு அரசு

மதியுரைஞர்கள்

டத்தோ. எம். சரவணன்,
துணையமைச்சர், மலேசியா

டான்ஸ்ரீ டத்தோ க. குமரன்,
மேனாள் துணையமைச்சர், மலேசியா

முனைவர். சுப. திண்ணப்பன்,
மதியுரைஞர், சி.த.எ. கழகம், சிங்கப்பூர்

திரு. எம். ஏ. முஸ்தபா
நிறுவனர். முஸ்தபா தமிழ் அறக்கட்டளை, சிங்கப்பூர்

திரு. மன்னர்மன்னன்,
தலைவர், மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம்

திரு. பெ. ராஜேந்திரன்
அயலகத் தொடர்புக்குழுத் தலைவர்,
ம.த.எ. சங்கம், மலேசியா

திரு. சங்கர் விசுவநாதன்
துணைத் தலைவர். வி.ஐ.டி. பல்கலைக்கழகம்

முனைவர் சேகர் விசுவநாதன்
துணைத் தலைவர். வி.ஐ.டி. பல்கலைக்கழகம்

திரு. ஜி.வி. செல்வம்
துணைத் தலைவர். வி.ஐ.டி. பல்கலைக்கழகம்

திரு. சி.கே. அசோக்குமார்,
அறங்காவலர், சி.கே. கல்விக்குழுமம், கடலூர்

2 ஆம் உலகத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவினர் :

திரு. ப. முத்துக்குமாரசுவாமி தலைவர்
☎: +91-98402 45279 ✉: mkschennai@gmail.com

திரு. ஈரோடு **எஸ். ஆர். சுப்ரமணியம்**
துணைத் தலைவர்
☎: +91-93444 32888 ✉: erodesrs@gmail.com

திரு. மு. சிதம்பரபாரதி செயலாளர்
☎: +91-98407 10248
✉: mu.chidambarabhaarathy@gmail.com

திரு. சி. சித்தார்த்தன் பொருளாளர்
☎: +91-90031 11100 ✉: c.siddharthan@gmail.com

2 ஆம் உலகத் தமிழ் எழுத்தாளர் மாநாடு:

மாநாடு, தினமணி ஊடகத் தோழமையுடனும், சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழக ஆதரவுடனும் வி.ஐ.டி. தொழில்நுட்பப் பல்கலைக்கழகமும், வைகை இலக்கியக் கழகமும் இணைந்து நடத்துகின்றன. இம்மாநாட்டில் புதுதில்லி முத்தமிழ்ப் பேரவையும், புதுதில்லி கே.எம்.எஸ்.கலை உலகமும் பங்குபெறுகின்றன.

மின்னஞ்சல் முகவரிகள்:
wtwc2conference@gmail.com

மாநாட்டுக் கட்டுரைகளுக்கு:
wtwc2conferencepapers@gmail.com

மலர்க் கட்டுரைகளுக்கு:
mkschennai@gmail.com
mu.chidambarabhaarathy@gmail.com

பேராளர்கள் பதிவு செய்ய:
வெளிநாடு - wtwc2overseas@gmail.com
இந்தியா - wtwc2india@gmail.com
முகநூல் : 2nd world tamil writers conference

நாள்: 01-03-2017

வேர்களைத் தேடும் விழுதுகள்

இனிய தமிழ் நெஞ்சங்களுக்கு வணக்கம்!

வாழையடி வாழையென வளர்ந்து வரும் தமிழ் இனத்தின் மூத்த தலைமுறையினரோடு, நிகழ்காலத் தலைமுறையினரை இணைத்து, இலக்கிய வாழ்வை இயல்வாழ்வாக்க வேண்டி அயலகத் தமிழ் எழுத்தாளர்களை ஒருங்கு திரட்டி, தாய்த்தமிழகத்தின் தலைநகராம் சென்னையில் **வேர்களைத் தேடும் விழுதுகள்** என்ற பொருண்மையோடு 2017, ஜூன் திங்கள் 9,10,11 வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று நாட்களில், சென்னை 28, அடையாறு, இராஜா அண்ணாமலைபுரத்திலுள்ள முத்தமிழ்ப் பேரவையின் டி.என் இராஜரத்தினம் கலையரங்கத்தில் மாநாடு ஒன்று நிகழ இருக்கிறது.

போர் இலக்கியமும், புலம்பெயர் இலக்கியமும் ஒரே சூழலில் கருக்கொள்ளும் இரட்டைக் குழந்தைகள். உலக வரலாற்றில் எங்கெல்லாம் போர்கள் இடம் பெற்றனவோ அங்கெல்லாம் போர் இலக்கியங்களும், புலம் பெயர் இலக்கியங்களும் தோன்றியிருக்கின்றன. போர் இடம் பெறும் வேளையில் உள்நாட்டில் இருப்பது நமது உயிர் பாதுகாப்பிற்கு ஏற்றதல்ல என்று அஞ்சிப் பல்வேறு நாடுகளுக்குச் சிதறுண்டு சென்றவர்கள் தமது நாட்டினைப் பிரிந்து சென்ற ஏக்கத்தினையும், சென்றடைந்த நாடுகளில் தமக்கு ஏற்பட்ட துன்பம் நேர்ந்த அனுபவங்களையும் பதிவு செய்யும் இலக்கியங்கள் புலம்பெயர் இலக்கியங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. தமிழர்களின் புலம்பெயர்வு கிறிஸ்துவுக்கு முன்பாகவே ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முந்தைய வரலாற்றைக் கொண்டது.

சங்ககாலத்தில் ஏற்பட்ட புலம்பெயர்தலை, புறநானூற்றிலே என்பதில் பார்க்கிறோம். போர்க்காரணமாகத் தமிழர்கள் பிற இடங்களுக்குச் சென்றதை முல்லைப் பாட்டு, நெடுநல்வாடை ஆகிய இலக்கியங்களிலும் ஆற்றுப்படை நூல்களிலும் நாம் பார்க்கமுடிகிறது. பட்டினப்பாலை என்னும் நூலில் அன்றைய பூம்புகார் நகரமானது வெளிநாடுகளிலிருந்து வந்த 'புலம் பெயர் மாக்கள் கலந்தினிது உறையும்' (அடி 215), நகரமாகத் திகழ்கிறது. 'அவன் உறை முனிந்த ஒக்கலொடு புலம் பெயர்ந்து' என்று நற்றிணை கூறுகிறது. 'கலம்தரு

திருவின் புலம்பெயர் மாக்கள்' எனக் கடலாடு காதையில் இளங்கோவடிகள் குறிப்பிடுவதையும் பார்க்க முடிகிறது. ஈழத்துப் பூதத்தேவனார் தமிழ்நாட்டில் புலம் பெயர்ந்து வாழ்ந்ததாகத் தெரிகிறது.

தமிழர்களின் அடுத்தக் கட்டப் புலம்பெயர்வு 17ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலிருந்து 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை தமிழகத்திலிருந்து தமிழர்கள் மிகுதியாகப் புலம்பெயர்ந்ததாகத் தெரியவருகிறது. இத்தகைய புலம் பெயர்வு தாய்த்தமிழகத்திலிருந்து தமிழர்கள் மிகுதியாக இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, இந்தோனேசியா, தென் ஆப்பிரிக்கா, பிஜித்தீவுகள், ரீயூனியன் முதலிய நாடுகளுக்கு ஒப்பந்தத் தொழிலாளர்களாகத் தேயிலை, இரப்பர், கரும்புத் தோட்டங்களுக்கு பெருந்தொகையாக அழைத்துச் செல்லப்பட்டனர். ஆக அந்த வகையில் புலம் பெயர்ந்தோர் வாழ்வியல் இலக்கியம் தமிழ் இலக்கிய வரலாற்றில் பதியப்பட வேண்டிய ஓர் செய்தியாகும். நிகழ்காலத்தில் நம் கண் முன்னர் இலங்கையிலிருந்து பெரும் எண்ணிக்கையில் நடந்த புலம் பெயர்வுகளையும் நாம் அறிவோம்.

தாயகம் கடந்த தமிழ் இலக்கியம் குறித்துப் பல்வேறு மாநாடுகள் நடத்தப்பட்டாலும், தாயகம் கடந்த நம் தொப்பூள்க்கொடி உறவு முறை தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள், தெரிந்தோ தெரியாமலோ தாய்த்தமிழகத்தில் அதிகமாகக் கவனம் செலுத்தப்பட வில்லை என்ற குறையினை நிவர்த்திக்கின்ற வகையில், இரண்டாம் உலகத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டினை தாய்த்தமிழகத்தின் தலைநகர் சென்னையில் நடத்துகிறோம். இம் மாநாடு, தினமணி ஊடகத் தோழமையுடனும், சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழக ஆதரவுடனும், வி.ஐ.டி. தொழில்நுட்ப பல்கலைக் கழகமும், வைகை இலக்கியக் கழகமும் இணைந்து நடத்துகின்றன. இம்மாநாட்டில் புதுதில்லி முத்தமிழ்ப் பேரவையும், புதுதில்லி கே.எம்.எஸ். கலைஉலகமும் பங்குபெறுகின்றன.

முதல் மாநாட்டை **தாயகம் கடந்த தமிழ்** எனும் பொருண்மையோடு சிங்கப்பூரில் 2011ல் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம் நடத்திக் காட்டியது. அதன் தொடர்ச்சியாக இம்மாநாடு உலகத் தமிழ் எழுத்தாளர் இரண்டாம் மாநாடு ஏற்பாட்டுக் குழுவினரால் சென்னையில் நடத்தப்பட இருக்கிறது.

இம்மாநாட்டில் 12 அமர்வுகள் நிகழ இருக்கின்றன. கருத்தரங்க அமர்வுகளில் முழுக்க முழுக்க தாயகம் கடந்த தமிழ் எனும் புலம் பெயர்ந்த அயலகத் தமிழ் இலக்கியங்களுக்கே முன்னுரிமை கொடுக்கப்படும். கருத்தரங்கத்தின் ஒவ்வொரு அமர்வுகளுக்கும் சாகித்திய அகதெமி விருதினைப் பெற்ற தமிழ் எழுத்தாளர் ஒருவர் தலைமை ஏற்பார். அமர்வில் கட்டுரை வாசிப்போர் அயலகத் தமிழ் எழுத்தாளர்களாக இருப்பர். கருத்தரங்கத்தில் பங்குபெற விழைகின்ற அயலகத்தமிழ் எழுத்தாளர்கள் மாநாட்டுப் பதிவு அலுவலக, செயல் அலுவலக

மின்னஞ்சல் முகவரிக்குத் தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கருத்தரங்கில் கட்டுரை வாசிக்கப் பேராளர்களைத் தேர்வு செய்து மாநாட்டுச் செயல் அலுவலகத்திற்கு பரிந்துரைக்க சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகத்தின் தலைவர் தமிழ்த்திரு. நா. ஆண்டியப்பன் அவர்கள் பேருவகையோடு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியினைப் பதிவு செய்வதில் நாங்கள் பெருமகிழ்ச்சியடைகிறோம். இம்மாநாட்டில் சிங்கப்பூர், மலேசியா, பிரான்ஸ், இலங்கை, ஆஸ்திரேலியா, மொரீஷியஸ், பிரிட்டன் போன்ற நாடுகளிலிருந்து அயலகத் தமிழ் எழுத்தாளர்கள் பங்குபெற இருக்கிறார்கள்.

மாநாட்டில் கருத்தரங்கம், சொல்லரங்கம், பட்டிமன்றம், நாட்டிய நாடக நிகழ்ச்சி, தொன்மையான நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சி, மங்கல இசை, அயலகத் தமிழ் எழுத்தாளர்கள் ஒன்றுகூடும் கலந்துரையாடல் போன்ற நிகழ்வுகள் நிகழ இருக்கின்றன. அயலகத் தமிழ்ப் படைப்பாளிகள் தங்கள் படைப்புகளை வெளியிட்டு, விற்பனை செய்யும் புத்தக அரங்கமும் நிறுவப்படுகிறது.

மாநாடு வெற்றியடையவும், அயலகத் தமிழ் எழுத்தாளர்கள் மாநாட்டில் பங்கேற்கவும், மாநாட்டு மலருக்கு விளம்பரம் பெற்றிடவும், நன்கொடை பெற்றிடவும், அயலகத் தமிழ்ச் சான்றோர்களும் எழுத்தாளர்களும் புரவலர்களும் பேராதரவு தருமாறு வேண்டிக் கொள்கிறோம்.

இந்தியத் திருநாட்டில் பிற மாநிலங்களில் சீரோடும், சிறப்போடும் தமிழ்ச் சங்கத்தினை நடத்திவரும் புதுதில்லி, புவனேஸ்வர், கொல்கத்தா, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி உள்ளிட்ட இந்திய பிறமாநிலங்களில் உள்ள தமிழ்ச்சங்கங்களோடு, மதுரை உலகத் தமிழ்ச்சங்கம் மற்றும் நவீமும்பைத் தமிழ்ச்சங்கச் செயல் உறுப்பினர்களையும், இம்மாநாட்டிற்கு ஆதரவு கோரி நேரில் அழைக்க இருக்கிறோம் என்பதோடு, இம்மாநாடு வெற்றிபெறத் தமிழ் எழுத்தாளராகிய தங்களது பங்களிப்பையும் தந்திட வேண்டுகிறோம். தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம், மற்றும் தமிழகத்திலுள்ள பல்கலைக் கழகங்களின் தமிழ்த் துறையினரையும் மாநாட்டிற்கு ஆதரவு கோரி அணுக இருக்கிறோம் என்பதனையும் தெரிவித்து, இம்மாநாடு மிகச் சிறப்பாக வெற்றியடைய தமிழ் எழுத்தாளர்களாகிய உங்களது பங்களிப்பினை தந்திட வேண்டும் என்று கரம் குவித்து வேண்டுகிறோம்.

நன்றி!

செயலாளர்	*துணைத் தலைவர்*	*தலைவர்*
அலைபேசி: 9840710248	அலைபேசி: 9344432888	அலைபேசி: 9840245279

அன்பான வேண்டுகோள்

அ) மாநாட்டில் கட்டுரை படைக்க விரும்புவோருக்கான விதிகள்:

கீழ்க்கண்ட பொருண்மைகளில் அந்தந்த நாட்டிற்கேற்ப கட்டுரைகளை எழுதி அனுப்பவேண்டும். கட்டுரைகள் ஒருங்குறி எழுத்துருவில் (Unicode) 12 புள்ளியில் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும். கட்டுரைகள் 1800 முதல் 2000 வார்த்தைகளுக்குள் இருக்கவேண்டும். அதற்குமேல் உள்ள கட்டுரைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. கட்டுரைகளைத் தேர்வுசெய்ய அமைக்கப்படும் கட்டுரைத் தேர்வுக் குழுவால் தேர்வு செய்யப்படும் கட்டுரைகள் மட்டுமே மாநாட்டில் படைக்க அனுமதி வழங்கப்படும். அவர்களுக்கு மட்டுமே இடவசதி, உணவு போன்ற சலுகைகள் வழங்கப்படும். அவர்கள் சொந்தச் செலவில் சென்னை வந்துசெல்ல வேண்டும்.

ஒவ்வொரு கட்டுரையாளருக்கும் தங்கள் கட்டுரையைப் படிக்க 15 நிமிடங்கள் மட்டுமே ஒதுக்கப்படும். அதற்குள் அவர்கள் தங்கள் கட்டுரைகளைப் படைத்து முடித்து விடவேண்டும். நேரக்கட்டுப்பாடு மிக, மிகக் கண்டிப்பாகப் பின்பற்றப்படும். படவில்லைகள் (Power Point Slides) பயன்படுத்த விரும்புவோர் கட்டுரை அனுப்பும்பொழுதே அதுபற்றித் தெரிவிக்க வேண்டும். அவர்கள் தங்கள் சொந்த மடிக்கணினியைக் கொண்டுவர வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரைகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு நூலாக வெளியிடப்படும். மாநாட்டுக் கட்டுரைகள் wtwc2conferencepapers@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு 15.04.2017ஆம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். அதற்குப் பிறகு வரும் கட்டுரைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. காலம், கருத்து அடிப்படையில் கருத்தரங்கில் வாசிக்கத் தெரிவு செய்ய முடியாவிட்டாலும் தரமிக்க கட்டுரைக்கோவையில் இடம் பெற வாய்ப்புண்டு தேர்வு செய்யப்பட்ட கட்டுரையாளர்களுக்கு 30-4-2017 க்குள் தகவல் தெரிவிக்கப்படும்.

ஆ) பொருண்மைகள்

1. எங்கள் நாட்டுத் தமிழர்களின் வாழ்வும் வரலாறும் 1 (இலங்கை, சிங்கப்பூர், மலேசியா)
2. எங்கள் நாட்டுத் தமிழர்களின் வாழ்வும் வரலாறும் 2 (ஆஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ்)
3. எங்கள் நாட்டுத் தமிழர்களின் வாழ்வும் வரலாறும் 3 (அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி)
4. எங்கள் நாட்டுத் தமிழ் இலக்கியத்தில் மண்ணும் மரபும் 1 (இலங்கை, சிங்கப்பூர், மலேசியா)

5. எங்கள் நாட்டுத் தமிழ் இலக்கியத்தில் மண்ணும் மரபும் 2 (ஆஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ்)

6. எங்கள் நாட்டுத் தமிழ் இலக்கியத்தில் மண்ணும் மரபும் 3 (அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி)

7. எங்கள் நாட்டில் தமிழ்மொழி - இலக்கியத்தில் தேடலும் கோடலும் 1 (மொரீஷியஸ், மியன்மார், தென்னாப்பிரிக்கா)

8. எங்கள் நாட்டில் தமிழ்மொழி - இலக்கியத்தில் தேடலும் கோடலும் 2 (பிஜிதீவுகள், ரியூனியன் தீவுகள், அரபுநாடுகள், சீனா, ஐரோப்பா (பிரான்ஸ், ஜெர்மனி தவிர்த்து) இவற்றில் ஏதாவது 3 நாடுகள்)

9. மின் தமிழ் இலக்கியத்தின் தற்போதைய நோக்கும் போக்கும் (பொது)

இ) மாநாட்டு மலருக்கான கட்டுரைகள்

மாநாட்டு மலருக்கு மேற்கண்ட பொருண்மைகளிலோ வேறுதலைப்புகளிலோ கட்டுரை களை அனுப்பிவைக்கலாம். மலருக்கான கட்டுரைகளும் அதேஅளவுதான் இருக்க வேண்டும். (1800 முதல் 2000 வார்த்தைகளுக்குள்). மலருக்கான கட்டுரைகளை 30.04.2017ஆம் தேதிக்குள் ஏற்பாட்டுக்குழுத் தலைவர் திரு. ப. முத்துக்குமாரசுவாமி அவர்களின் mkschennai@gmail.com மின்னஞ்சலுக்கும் செயலாளர் திரு. மு.சிதம்பரபாரதி அவர்களின் mu.chidambarabhaarathy @gmail.com மின்னஞ் சலுக்கும் அனுப்பி வைக்கவேண்டும்.

மாநாட்டு மலரில் தாய்த் தமிழகத்து எழுத்தாளரும் பங்குபெறவேண்டி அவர்களும் மேற்கண்ட பொருண்மைகளில் கட்டுரைகளை அனுப்பிவைக்கலாம். அதனுடன் பதிவுக்கட்டணமாக ரூ.500 செலுத்திடக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். நிறைவுவிழா அன்று மாநாட்டுமலர் அன்பளிப்பாக வழங்கப்படும்.

ஈ) மாநாட்டுப்பதிவு

வெளிநாட்டுப் பேராளர்கள் www.wtwc2.com எனும் இணையதளத்திற்குச் சென்று Delegates Registration Form – Overseas படிவத்தைப் பதிவிறக்கம் செய்து, பூர்த்திசெய்து, கட்டணத்தைச் செலுத்தியபின் wtwc2overseas@gmail.com அனுப்ப வேண்டும். அதேபோல் இந்தியப்பேராளர்கள் www.wtwc2.com எனும் இணைய தளத்திற்குச் சென்று Delegates Registration Form – India படிவத்தைப் பதிவிறக்கம் செய்து, பூர்த்திசெய்து, கட்டணத்தைச் செலுத்தியபின் wtwc2india@ gmail.com அனுப்பவேண்டும். படிவமும் கட்டணமும் 30 ஏப்ரல் 2017ஆம் தேதிக்குள் வந்து சேரவேண்டும்.

உ) முகநூல் முகவரி

இரண்டாம் உலகத் தமிழ் எழுத்தாளர் மாநாடு தொடர்பான செய்திகள் அனைத்தும் 2nd world tamil writers conference என்ற முகநூல் முகவரியில் பார்த்து மகிழுங்கள். கருத்துக்களை பரிமாறிக்கொள்ளலாம்.

(அ) பேராளர்களாகப் பதிவு செய்ய இறுதி நாள் : 30-4-2017

(ஆ) பேராளர் பதிவுக் கட்டணம் : 9-6-2017 காலை 6 மணி 11-6-2017 இரவு 12 மணிவரை வெளிநாட்டுப் பேராளர்களுக்கு :

1. அமெரிக்கன் டாலர் 100 (தங்குமிடம் இல்லை)
2. வெளிநாட்டுப் பேராளர்களுக்கு அமெரிக்கன் டாலர் 300 (இருவர் தங்கும் குளிர்சாதன அறை தங்குமிடம்)
3. பதிவு செய்ய : wtwc2overseas@gmail.com
4. இந்திய நாட்டுப் பேராளர்களுக்கு : ரூபாய் 3000 மட்டும் (தங்குமிடம் இல்லை)
5. பதிவு செய்ய : wtwc2india@gmail.com

(மேற்கண்ட கட்டணங்கள் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் WORLD TAMIL WRITERS CONFERENCE என்ற பெயரில் CITY UNION BANK, Medavakkam Branch, Currunt Account No. 51909010059558 IFSC Code: CIUB0000305, Micr Code: 600054045, Branch Code- 000305 Address: 9959, Tambaram-Velachery Main Road, Medavakkam, Chennai-600100 Contact Cell Phone No. +91 99803 51760 என்ற வங்கிக் கணக்கில் செலுத்திட அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பேராளர்கள் வசதி கருதி மற்றுமொரு வங்கிக் கணக்கு Axis Bank ல் துவங்க உள்ளோம். அதன் கணக்கு எண் விவரங்களை விரைவில் தெரிவிக்கப்படும்.

உணவு வசதி : பங்கு பெறுகின்ற அனைவருக்கும் 9-06-2017ஆம் தேதி காலை முதல் 11-06-2017ஆம் தேதி இரவு வரை. காலை உணவு - இடைவேளை சிற்றுண்டி, தேநீர் மதியம் - இரவு முடிய சைவ - அசைவ உணவு வழங்கப்படும்.

பரிசுப் பொருள்கள் (பேராளர்களுக்கு மட்டும்) :

1. விலையுர்ந்த தோல்பை ஒன்று
2. 600 பக்கங்கள் அளவில் மாநாட்டு மலர்
3. மாநாட்டுக் கட்டுரைத் தொகுப்பு
4. 2011ல் சிங்கப்பூரில் நடந்த முதலாம் உலகத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டுக் கட்டுரைத் தொகுப்பு
5. திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பு நூல்
6. கண்ணாடிப் பேழைக்குள் திருவள்ளுவர் சிலை
7. குறிப்புப் புத்தகம், இரண்டு பேனாக்கள்
8. இலட்சினை பொறித்த இரண்டு சதுர வடிவான துண்டுகள்
9. கடவுச் சீட்டு, முகவரி அட்டை, வங்கி அட்டைகள் வைத்துக்கொள்ளும் சிறிய தோல்பை

பன்னாட்டு ஒருங்கிணைப்பாளர்கள்

திரு. சுப. அருணாசலம், செயலாளர்,
சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம், சிங்கப்பூர்

முனைவர். முரசு. நெடுமாறன், மலேசியா

திரு. கி. மோகன், தலைவர்
தமிழ்ச்சங்கம், துபாய்

திரு. தெ. ஈசுவரன் பிள்ளை, தலைவர்
கொழும்பு கம்பன் கழகம், இலங்கை

கலாநிதி இ. நித்தியானந்தன்,
இலண்டன், இங்கிலாந்து

வழக்குரைஞர் **திருமதி சந்திரிகா சுப்பிரமணியம்,** ஆஸ்திரேலியா

ஆ.சி. கந்தராஜா, தலைவர்
தமிழ் எழுத்தாளர் சங்கம், மெல்போர்ன்,
ஆஸ்திரேலியா

திருமதி செல்லப்பாப்பா கீரன்,
சிக்காக்கோ, அமெரிக்கா.



உலகத் தமிழ் எழுத்தாளர் இரண்டாம் மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவினர் விவரம்

துணைச் தலைவர்கள்

முனைவர் இரா. இரவிச்சந்திரன்	
பேராசிரியர் சுப்பிரமணியம்	
திரு. இரா. முகுந்தன்	புதுதில்லி
திரு. என். கண்ணன்	புதுதில்லி
திரு. கே.வி.கே. பெருமாள்	புதுதில்லி
டாக்டர் கே. முத்துசுவாமி	புதுதில்லி
டாக்டர் எம். முத்துசுவாமி	எம்.எம். தொழில் குழுமம்
புலவர் குருசாமி தேசிகர்	மதுரை
முனைவர் இராமன்	எம்.எஸ்.எஸ்.ஆர். எஃப், சென்னை

துணைச் செயலாளர்கள்

திரு. தங்கக்காமராஜ்,	உதவி இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை, தமிழக அரசு
முனைவர் கிருங்கை சேதுபதி	
திரு. சொ. அருணன் கபிலன்	
திரு. ஆர்.எஸ். அருண்	
திரு. ம. பாலமுருகன்	
திரு. ஞானசி	
திரு. மானா பாஸ்கரன்	துணைஆசிரியர், தமிழ்இந்து
திரு.என். நடராஜன்	
இலக்கியவீதி இனியவன்	செயலாளர், கம்பன் கழகம், சென்னை
முனைவர் யாழ் சந்திரா	மதுரை
திருமதி பவளசங்கரி	ஈரோடு

செயலவை உறுப்பினர்கள்

கவிஞர் மணமேடு குருநாதன்	ஜனாதிபதி விருதுபெற்ற நல்லாசிரியர்
கவிஞர் பாரதி வசந்தன்	புதுச்சேரி
த. மாசிலாமணி	திருப்பூர்
பேராசிரியர் த. சோமசுந்தரம்	பூம்புகார்
டாக்டர் ச. சத்தியமூர்த்தி	இயன்முறை மருத்துவர், குன்றத்தூர், சென்னை
ஆ. சுயம்புலிங்கம்	

மாநாட்டு மலர் விளம்பரக் கட்டண விவரம்:

Book Inner

Pages	:	600 pages
Size	:	8.5 x 11 inches
Paper	:	100 gsm Real Art Paper
Printing	:	4 colour

Book Wrapper & Outer Cover

Pages	:	2 pages
Size	:	8.5 x 11 inches
Paper	:	170 gsm Real Art Paper
Printing	:	4 colour
Finishing	:	Matt Lamination + Foil + Emboss

Binding Type

Binding	:	Thick Poly Board - Case Binding
	:	Inner 120 Gsm - Map Litho Paper

கட்டணம்:

முன்பக்க உள் அட்டை பல வண்ணத்தில் ரூ. 50000.00

பின்பக்கம் உள் அட்டை பல வண்ணத்தில் ரூ. 45000.00

முழுப் பக்கம் பல வண்ணத்தில் ரூ. 40000.00

அரைப் பக்கம் பல வண்ணத்தில் ரூ. 20000.00

கால் பக்கம் பல வண்ணத்தில் ரூ. 10000.00

தமிழ்

எங்கள் மூச்சாகும்

தமிழுக்கும் அமுதென்று பேர்! - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் சமுகத்தின் விளைவுக்கு நீர்!
தமிழுக்கு மணமென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!
தமிழுக்கு மதுவென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச்செம் பயிருக்கு வேர்!

தமிழ் எங்கள் இளமைக்குப் பால்! - இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! - இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! - இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!
தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்! - இன்பத்
தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ!

-பாரதிதாசன்